ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இல. PS/ADA/Circular /13/2025
2025 நவம்பர் 14 ஆம் திகதி

சகல மாவட்ட செயலாளர்கள்
சகல பிரதேச செயலாளர்கள்

விஷ போதைப்பொருட்களை முழுமையாக ஒழிப்பதற்கான *"ரட்டம எகட்ட* தேசிய செயல்பாடு" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்ட மற்றும் பிரதேச செயல்பாட்டுக் குழுக்களை தாபித்தல்

அணுகுகை

ஒரு நாட்டின் மிகவும் பெறுமதி வாய்ந்த வளமாக காணப்படும் நாட்டின் சிறுவர் சமுதாயம் மற்றும் இளைஞர் சமுதாயத்தைக் குறிவைத்து முன்னெடுக்கப்படும் ஓர் ஆபத்தான அச்சுறுத்தலாக விஷ போதைப்பொருட்களைச் சுட்டிக்காட்ட முடியும். ஒரு நாட்டின் எதிர்காலத்தை முற்றுமுழுதாக அழிவுக்கு இட்டுச் செல்லக்கூடிய பாரதூரமான ஓர் அபாயம் அதன் மூலம் விளைவிக்கப்படுகின்றது உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் வலையமைப்புக்கள் மூலம் இயக்கப்படும் இந்த அச்சுறுத்தலை பரந்துபட்ட தேசிய அணுகுமுறை ஒன்றின் மூலம் ஒழித்துக்கட்ட வேண்டிய ஒரு தீர்க்கமான கட்டத்தினை நாடு என்ற ரீதியில் நாம் அடைந்துள்ளோம்.

அதன்படி, இதற்கான தீர்வாக அமப/25/1937/801/026 ஆம் இலக்க 2025.10.13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் விஷ போதைப்பொருட்களை முழுமையாக ஒழிப்பதற்கான *"ரட்டம எகட்ட* தேசிய செயல்பாடு" கௌரவ சனாதிபதி அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. விஷ போதைப்பொருள் தருவிப்பவர்கள் மற்றும் விநியோகிப்பவர்கள் உள்ளிட்ட போதைப்பொருள் கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களை சட்டத்தின் முன் நிறுத்துதல், தனிமைப்படுத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை அந்த அழிவுகரமான போதைப்பொருளுக்கு அடிமையான நிலையிலிருந்து விடுவித்து புனர்வாழ்வளித்தல் ஆகியன அதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

"போதை இல்லாத நாடு - மகிழ்ச்சியான நாளை" என்பதை உருவாக்குவதனை தொலைநோக்காக கொண்ட இந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம் விஷ போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு எதிராக பாரியதொரு சமூகத் தாக்கம் மற்றும் அழுத்தம் ஆகியவற்றை கட்டியெழுப்புவதற்காக அரசு, பாதுகாப்பு பிரிவுகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் ஒட்டுமொத்த பிரசைகளும் இணைந்த பரந்துபட்ட மக்கள் பங்கேற்புடன் கூடிய ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கி பின்வரும் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகிறது:

i. கடத்தல் வியாபாரிகள் மற்றும் விநியோகஸ்தர்களை சட்டத்தின் முன் நிறுத்துதல் மற்றும் தனிமைப்படுத்துதல்.
ii. போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் சிகிச்சைக்காக பரிந்துரைத்தல்.
iii. தேசிய, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டத்தில் செயல்படுத்தும் பொறிமுறை ஒன்றை தாபித்தல்.
iv. "வெளியேறு" எனும் தொனிப்பொருளின் கீழ் விரிவான பிரச்சார செயன்முறை ஒன்றின் மூலமான சமூக விழிப்புணர்வுக்குத் தேவையான அமைப்பு ரீதியான பொறிமுறையை வலுப்படுத்துதல்.

மேற்குறித்த நோக்கங்களை அடைவதற்கான தேசிய செயல்பாட்டுக் குழு ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மாவட்ட மற்றும் பிரதேச செயல்பாட்டுக் குழுக்களை தாபிப்பதன் ஊடாக அரசு மற்றும் பொதுமக்களை மிகவும் நெருக்கமாக ஒருங்கிணைத்து விஷ போதைப்பொருள்

காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
தொலைபேசி Telephones ++ 94 (0) 11 2354418 ++ 94 (0) 11 2473873
தொலைநகல் Fax ++ 94 11 2446657
மின்-அஞ்சல் e-mail prsec@presidentsoffice.lk

அச்சுறுத்தலை முழுமையாக ஒழிப்பதற்கான தேசிய செயல்பாட்டின் எதிர்கால பணிகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

01. மாவட்ட செயல்பாட்டுக் குழு

1.1 இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் தலைமையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட செயல்பாட்டுக் குழு தாபிக்கப்படல் வேண்டும். அதன் உள்ளடக்கம் இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது. மாவட்ட செயல்பாட்டுக் குழுவின் கடமைப்பொறுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுடன் ஒத்துப்போகும் வகையில் மற்றும் தேசிய செயல்பாட்டுக் குழுவின் கடமைப்பொறுப்புடன் ஒத்துப்போகும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்தினதும் தேவைகளைக் கருத்திற் கொண்டு தீர்மானிக்கப்படல் வேண்டும். விசேடமாக மாவட்ட மட்ட தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டுதலை வழங்கி தேசிய செயல்பாட்டுக் குழுவால் திட்டமிடப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை மாவட்ட மட்டத்தில் பயனுள்ளவாறு மற்றும் செயல்திறனுடன் நடைமுறைப்படுத்துதற்கு மாவட்ட செயல்பாட்டுக் குழுவிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

02. பிரதேச செயல்பாட்டுக் குழு

2.1 அதன் உள்ளடக்கம் இணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ளது. பிரதேச செயல்பாட்டுக் குழுவின் கடமைப்பொறுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுடன் ஒத்துப்போகும் வகையில் மற்றும் மாவட்ட செயல்பாட்டுக் குழுவின் கடமைப்பொறுப்புடன் ஒத்துப்போகும் வகையில் பிரதேசத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டு தீர்மானிக்கப்படல் வேண்டும். விசேடமாக பிரதேச மட்ட தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டுதலை வழங்கி தேசிய செயல்பாட்டுக் குழு மற்றும் மாவட்ட செயல்பாட்டுக் குழுவால் திட்டமிடப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச மட்டத்தில் பயனுள்ளவாறு மற்றும் செயல்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கு பிரதேச செயல்பாட்டுக் குழுவிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

2.2 மேலும், 14,000 இற்கும் மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்கள் ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ளதுடன் அக்கட்டமைப்பின் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டம் கிராம மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

2.3 இதற்கு மேலதிகமாக "*ரட்டம எகட்ட* தேசிய செயல்பாடு" நிகழ்ச்சித்திட்டத்தை பொதுமக்களிடம் கொண்டு செல்வதற்கான விளம்பரத் தூதுவர்கள் மற்றும் வெளியீட்டாளர்களை உள்ளடக்கிய ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படும்.

03. மாவட்ட மற்றும் பிரதேச செயல்பாட்டுக் குழுக்களின் பணிகள்

3.1. ஆண்டின் துவக்கத்தின் முதல் இரண்டு வாரங்களில் மாவட்ட செயலாளர் அந்த ஆண்டிற்கான மாவட்ட அல்லது பிரதேச செயல்பாட்டுக் குழுக்களை நடத்துவதற்கான தற்காலிகமாக திட்டமிடப்பட்ட திகதிகள் பற்றிய தகவல்களை பொதுமக்கள் பாதுகாப்பு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும். திட்டமிடப்பட்டவாறு மாவட்ட அல்லது பிரதேச செயல்பாட்டுக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதுடன் செயல்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களுக்கு திட்டமிடப்பட்டவாறு மற்றும் பயனுள்ளவாறு அக்கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு இடமளிக்கும் வகையில் கூட்டத் திகதியை குறைந்தது 07 நாட்களுக்கு முன்னதாக அறிவிக்க வேண்டும்.

3.2. மாவட்ட / பிரதேச செயல்பாட்டுக் குழுவின் தலைவரிடம் வினவி மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளரால் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதன் பணிகள் விஷ போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

3.3. குறித்த மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப் பிரிவின் தேவைகளைக் கருத்தில் கொண்டு செயல்பாட்டுக் குழுக்களின் தலைவர்களுக்கு உப குழுக்களை (பாதுகாப்பு, சமய, சமூகம் போன்றவை) நியமிக்க முடியும் என்பதுடன் அந்த எண்ணிக்கை அதிகபட்சம் 03 பேருக்கு வரையறுக்கப்படல் வேண்டும்.

3.4. மாவட்ட/ பிரதேச செயல்பாட்டுக் குழுக்கள் தங்களது பணிகளை நிறைவேற்றும் போது

அரசாங்க சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

3.5. மாவட்ட/ பிரதேச செயல்பாட்டுக் குழுவின் செயல்பாடு தொடர்பான பின்வரும் விடயங்கள் தொடர்பில் நிர்வாக ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் மற்றும் அதற்கான முறையியல்களை தயாரிப்பதற்கான அதிகாரம் செயல்பாட்டுக் குழுவுக்கு வழங்கப்படுவதுடன் அந்த முறையியலை சனாதிபதி அலுவலகம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

i. கூட்டத்தின் நேரம்
ii. செயல்பாட்டுக் குழுவுக்கு அத்தியவசியமற்ற அலுவலர்களை அழைக்காதிருத்தல்
iii. நிகழ்ச்சி நிரலின்படி ஒவ்வொரு அலுவலரும் குழுக் கூட்டத்தில் தங்கியிருக்க வேண்டிய நேரத்தை தீர்மானித்தல்
iv. நிகழ்நிலை முறையில் உறுப்பினர்களை தொடர்புபடுத்தல்
v. வெளிவாரி நபர்களை தொடர்புபடுத்தல் மற்றும் அந்த நபர்களை கூட்டத்தின் கலந்துரையாடல் நேரத்தில் நிறுத்தி வைத்தல் / நிறுத்தி வைக்காதிருத்தல்
vi. கலந்துரையாடல் குறிப்புக்களின் மாதிரி மற்றும் முன்னேற்ற மீளாய்வு முறையியல்

3.6. கூட்டத்தின் அனைத்து பதிவுகளையும் எழுத்துமூலமாக மற்றும் பதிவுசெய்து வைத்திருத்தல் மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளரின் பொறுப்பாகும். கூட்டத்தின் கலந்துரையாடல் குறிப்புகள், கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஏற்புடைய நிறுவனங்களுக்கு வன்பொருள் / மென்பொருள் பிரதியாக கூட்டம் நடைபெற்று 03 நாட்களுக்குள் அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறே அதன் பிரதிகள் சனாதிபதி அலுவலகம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3.7. கூட்டத்தின் விடயங்கள் பற்றி செய்தி வெளியிடுவதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதுடன் தேவைப்படின் கூட்டத்தின் இறுதியில் மாவட்ட/ பிரதேச செயல்பாட்டுக் குழுக்களின் தலைவர்களுக்கு ஊடகங்களுடன் புறம்பான கலந்துரையாடலை மேற்கொள்ள முடியும்.

3.8. சம்பவங்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பான கூருணர்வுடைய தகவல்கள் மற்றும் தகவல் அளிப்பவர்களின் அடையாளம் ஆகிய விடயங்கள் பற்றி பகிரங்கமாக கலந்துரையாடக் கூடாது.

04. மாவட்ட/ பிரதேச செயல்பாட்டுக் குழுக்களின் மேற்பார்வை

4.1. மாவட்ட மற்றும் பிரதேச செயல்பாட்டுக் குழுக்களின் மேற்பார்வை மற்றும் வசதிகளை வழங்குதலை சனாதிபதி அலுவலகம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சு ஆகியன இணைந்து மேற்கொள்ளும்.

05. மாவட்ட/ பிரதேச செயல்பாட்டுக் குழுக்கள் தொடர்பில் அரச அலுவலர்களின் பொறுப்பு

5.1. விஷ போதைப்பொருட்களை முழுமையாக ஒழிப்பதற்கான *"ரட்டம எகட்ட* தேசிய செயல்பாட்டை" மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தும் முக்கியமான பொறிமுறையாக மாவட்ட/ பிரதேச செயல்பாட்டுக் குழு காணப்படுகிறது என்பதனை வலியுறுத்துவதுடன் அந்த குழுக்களின் உறுப்பினர்கள் குறித்த நடவடிக்கைகளில் செயலூக்கமான பங்களிப்பை வழங்குதல் வேண்டும். அதன் பிரகாரம் மாவட்ட/ பிரதேச செயல்பாட்டுக் குழுக்கள் மூலம் எடுக்கப்படும் சட்டரீதியான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு அரச அலுவலரும் முழுமையாக கட்டுப்பட்டுள்ளார்.

5.2. மாவட்ட/ பிரதேச செயல்பாட்டுக் குழுக்களுக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு அரச அலுவலரும் அதில் கலந்து கொள்ளல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு கலந்து கொள்ள முடியாவிட்டால் முன்கூட்டியே அதுபற்றி செயல்பாட்டுக் குழுவின் செயலாளருக்குத் அறிவித்து அதற்குப் பொருத்தமான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

06. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2025 ஆம் ஆண்டுக்குத் தேவையான ஒதுக்கீடுகள் *கிளீன் ஸ்ரீலங்கா* (Clean Sri Lanka) நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன் 2026 ஆம் ஆண்டு முதல் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும்.

07. அரசாங்கத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்டவிதிகள் அல்லது கட்டளைகளுக்கு இணங்க இந்த சுற்றறிக்கையில் உள்ள விடயங்களில் திருத்தங்களை உள்ளடக்குதல் தொடர்பில் உங்களுக்கு ஏற்புடையவாறு அறிவிக்கப்படும்.

08. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான விசாரணைகள்/ தெளிவுபடுத்தல்கள் அல்லது ஏற்புடைய ஏனைய தகவல்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையாயின் சனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு. கே.எல்.டி.அசேல அவர்களை (தொலைபேசி இல.0112354354 - உள்இணைப்பு இல. 3606 / மின்னஞ்சல் sas6.ada@presidentsoffice.lk) ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.

09. எமது நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள இந்த தேசிய பேரிடரிலிருந்து நாட்டைக் காப்பாற்றி நம் அனைவரும் பிரார்த்திக்கும் அழகான இலங்கையை உருவாக்கும் இந்த மாபெரும் தேசிய பணிக்கான உங்களின் செயலூக்கமான பங்குபற்றல், பங்களிப்பு, அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைப்பை நான் எதிர்பார்க்கின்றேன்.

ஒப்பம்/ கலாநிதி என்.எஸ். குமாநாயக்க
சனாதிபதியின் செயலாளர்
தொலைபேசி : +94 11 3254420 தொலைநகல் : +94 11 2446657
மின்னஞ்சல் :- prsec@presidentsoffice.lk

பிரதிகள்:
1. அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள்
2. அனைத்து மாகாண ஆளுநர்கள்
3. பிரதம அமைச்சரின் செயலாளர்
4. அமைச்சரவைச் செயலாளர்
5. செயலாளர், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
5. கணக்காய்வாளர் தலைமையதிபதி
6. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
7. அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்

இணைப்பு 1

மாவட்ட செயல்பாட்டுக் குழுவின் உள்ளடக்கம்

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள்

1. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் - தலைவர்
2. கௌரவ. ஆளுநர்
3. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள்
4. மாகாண பிரதம செயலாளர்
5. மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் - மாவட்ட செயல்பாட்டுக் குழுவின் செயலாளர்
6. மாகாண சபை அமைச்சின் செயலாளர்கள்
7. உள்ளூராட்சி ஆணையாளர்
8. மாகாண நன்னடத்தை ஆணையாளர்
9. மாகாண கல்விப் பணிப்பாளர்
10. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
11. மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்
12. மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் / பிரிவுக்குப் பொறுப்பான அலுவலர்கள்
13. மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதான பாதுகாப்பு பிரிவு அலுவலர்கள் - முப்படைகள்
14. கரையோரப் பாதுகாப்பு திணைக்கள அலுவலர்கள்
15. தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் மாவட்ட அலுவலர்கள்
16. புனர்வாழ்வுப் பணியகத்தின் அலுவலர்கள்
17. சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலர்கள்

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணக்கப்பாட்டுடன் அழைக்கப்பட வேண்டிய நபர்கள்

1. அனைத்து சமயங்களின் தலைவர்கள்
2. சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள்
3. பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள்
4. தனியார் புனர்வாழ்வு நிறுவனங்களின் அலுவலர்கள்

இணைப்பு 2

பிரதேச செயல்பாட்டுக் குழுவின் உள்ளடக்கம்

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள்

1. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் - தலைவர்
2. பிரதேச செயலாளர் - செயலாளர்
3. உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்
4. உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள்
5. வலயக் கல்விப் பணிப்பாளர்
6. வைத்தியசாலையின் பணிப்பாளர்/ வைத்திய அத்தியட்சகர்
7. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள்
8. சுகாதார சேவை அலுவலர்கள்
9. நன்னடத்தை அலுவலர்கள்
10. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள்
11. சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள்
12. தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதேச அலுவலர்கள்
13. நிலையப் பொறுப்பதிகாரி - தேசிய இளைஞர் படையணி
14. நிலையப் பொறுப்பதிகாரி - தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபை/ அதிபர் - தொழில்நுட்பக் கல்லூரி
15. இளைஞர் சேவை அலுவலர்கள்
16. மதுவரி அலுவலர்கள்
17. சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலர்
18. பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்களின் தலைவர்கள்

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணக்கப்பாட்டுடன் அழைக்கப்பட வேண்டிய நபர்கள்

1. அனைத்து சமயங்களின் தலைவர்கள்
2. சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள்
3. பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள்